நகர் பஞ்சாயத்துக்கள்.

*** 464 வின.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலம், சீர்காழி, பொறையாறு, தரங்கம்பாடி ஆகிய நகர பஞ்சாயத்துக்களை நகராட்சி மன்றமாக மாற்றியமைக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்கக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, வருவாய் இவைகள் உள்ள மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவா ? எந்தெந்த மேஜர் பஞ்சாயத்துக்களை தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்க அரசு எண்ணியுள்ளது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 20,000-க்குக் குறையாத மக்கள் தொகையும், ஒரு லட்ச ரூபாய்க்குக் குறையாத வருவாயும் உள்ள பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக மாற்றப்படும். தஞ்சை மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஊர்கள் எவை இருக்கின்றன என்பதை கனம் உறுப்பினர் அவர்களே பரிசீலித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

பஞ்சாயத்துக்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள், நமூனுக்கள்.

*** 465 வின.— திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவைப்படும் புத்தகங்கள், நமூனுக்கள் போன்றவைகளை அரசாங்க அச்சகங்களில் அச்சிடாமல் ஹோ அண்ட் கோ போன்ற தனியார் அச்சகங்களில் அச்சிடுவது உண்மையா ?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் போன்ற நகராட்சிகளில் சாதாரணமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற நிகழ்ச்சி நிரல்கூட 20, 30 பிரதிகள் தேவைப்படுகிற நேரத்தில்கூட, அச்சகத்தில் அதை அச்சடிக்கிறர்களே, அதை மாற்றி சைகிளோஸ்டைல் செய்தால் போதும். அது ஓரளவுக்கு செலவைக் குறைக்கும் என்று அரசு உத்தரவிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப்பற்றி விவரம் இல்லை என்றாலும் கூட, நகராட்சியைப் பொறுத்த வரையிலே சென்னை எழுதுபொருள் அச்சகத்திலே அச்சிட்டுத் தரவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அதற்காக தனியாக அவர்கள் அச்சிடமாட்டார்கள். பொதுவாக நகராட்சி மன்றங்களுக்குத் தேவையான நமூனுக்களை மொத்தமாக அச்சிட்டு அவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பது வழக்கம். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தனிப்பட்ட முறையில் அச்சடித்திருந்தால், அவைகளையெல்லாம் சிக்கனப்படுத்தவேண்டும் என்று நாம் அறிவுரை வழங்குவதில் தவறு ஒன்றுமில்லை.

திரு ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவைப்படுகிற பாடப் புத்தகங்களை ஜூன் மாதத்திலேயே கிடைக்கும்படி செய்யவேண்டும். அப்படியில்லாமல் இப்பொழுது ஜூலை, ஆகஸ்டு மாதத்தில்தான் கிடைக்கிறது........